மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: இப்போது நாம் என்ன என்ன பொருள்களை இறக்குமதி செய்கிறோம்? முக்கியமாக, அவற்றை இறக்குமதி செய்வதில் நமக்குள்ள கஷ்டங்கள் என்ன? இது பற்றி மத்திய சர்க்காருக்கு நாம் என்ன எழுதியிருக்கிறோம்?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: இதுபற்றி முதலமைச்சர் அவர்களே ஒரு விழாவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனும் என்னென்ன உதவிகளைச் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது முக்கியமாக சில நாட்களாக தீப்பெட்டித் தொழிலுக்குத் தேவைப்படுகிற பொட்டாஷியம் குளோரைட் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இறக்குமதி லைசென்ஸ் வாங்கியபிறகு பலர் அதைத் தவறாகப் பயன்படுத்துவதாகவும், விற்றுவிடுவதாகவும் நாடாளுமன்றத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறதே. அப்படி நம்முடைய மாநிலத்தில் இறக்குமதி லைசென்சை தவறாகப் பயன்படுத்தியவர்கள் பட்டியல் ஏதாவது அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறதா? அந்தப் பட்டியலை அவைமுன் வைக்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் சேகரித்துக்கொடுக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பொட்டாசியம் குளோரைட் தீப்பெட்டித் தொழிலுக்கு மிகவும் இன்றியமையாதது. அது கிடைக்காத காரணத்தினால் தென்மாவட்டங்களில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மிகுந்த கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளன. துரிதமாக இதை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தீப்பெட்டித்தொழில் மூடப்படாதிருக்கவும், தொடர்ந்து இருந்துவரும் பொட்டாஷியம் குளோரைட் தட்டுப்பாட்டால் நிலவும் நெருக்கடி சூழ்நிலையைக் குறைக்கவும் சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் இது பற்றி மத்திய அரசுடனும், அதனுடைய வணிக கழகத்துடனும் வேண்டிய அளவு இறக்குமதி செய்வதுபற்றி தொடர்பு கொண்டுள்ளது.

ஸ்டார்ச் முதலியன தயாரிப்பு.

*315 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில்—மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975 மார்ச் 14]

உடுமலைப் பேட்டை தாலுகாவில் மக்காச்சோளத்தை உபயோகித்து ஸ்டார்ச்சு, குளூகோஸ் முதலியவைகள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஸ்டார்ச், குளூகோஸ் முதலியவற்றை தயாரிப்பதற்கு ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு சென்னையைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவருக்கு மத்திய அரசு பூர்வாங்க அனுமதியை வழங்கியுள்ளது. அவர் அத்தொழிற்சாலையை உடுமலைப்பேட்டை தாலுக்காவில் நிறுவலாமா என்பது குறித்து பரிசிலித்து வருகிறுர்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைக்கான முதலீடு எவ்வளவு? இது தற்போது எந்த நிலையில் உள்ளது ? அதை சீக்கிரம் முடிக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது இப்போது பரிசீலனை செய்யப்படுகிற நிலையில்தான் உள்ளது. மக்காச்சோளம் எங்கு அதிகமாகக் கிடைக்கிறதோ அந்த இடத்தில் ஆரம்பிக்கலாம் என்று சொல்கிறுர்கள். மதிப்பீடு தயாரிக்கிற நிலைக்கு வரவில்லை.

* 316 வினு— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில்-மின்சார துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், பாலையூரில் குளூகோஸ் தொழிற்சாலை ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாடு விவசாயத் தொழிற் கழகம், குளூகோஸ் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காக மத்திய அரசிடமிருந்து பூர்வாங்க அனுமதிக் கடிதத்தைப் பெற்றுள்ளது. அந்தக் கழகம் இத்தொழிற்சாலையை புதுக்கோட்டை மாவட்டம், பாலையூரில் அமைக்கலாமா என்பதனை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : இதற்கான முதலீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும், இது எப்போது துவங்கப்பட இருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது பூர்வாங்க ஆராய்ச்சி நிலையில் இருக்கிறது. அதைப்பற்றி மேற்கொண்டு விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : குளூகோஸ் தொழிற்சாலை ஆரம்பிப்பதிலே அதற்குத் தேவையான மூலப் பொருள்கள் என்ன என்ன ? அவை நம்முடைய மாநிலத்தில் போதுமான அளவு கிடைக்கிறதா என்பது ஆராயப்பட்டதா ? அது எவ்வளவு இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்